# கட்டுநாயக்க – சீதுவை நகர சபை

## கம்பஹா மாவட்டம்

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 29 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 16 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிகமையவும் கட்டுநாயக்க - சீதுவை நகர சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது முறையான கணக்குப் பதிவேடுகள் பேணப்பட்டுள்ளன என்றும் இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநாயக்க - சீதுவை நகர சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) எதிர்வரும் வருடங்களுக்காக கிடைத்திருந்த ஆதனவரிக்காக வழங்கப்பட்டிருந்த கழிவு ரூபா 99,089 தொகை கணக்குகளுக்கு கொண்டுவரப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஊழியர் பிணை ரூபா 2,851 தொகை விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் ஊழியர் பிணை மற்றும் ஊழயிர் பிணை முதலீட்டுக் கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிலையான வைப்புக்கள் ரூபா 5,225,000 ஆக கணக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும் சீதுவை மக்கள் வங்கியின் 1000015794 ஆம் இலக்க நிலையான வைப்பில் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான வங்கி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறான வைப்பு மீதியில் குறிப்பிடப்பட்டிருந்த மொத்த வட்டிப் பணமான ரூபா 275,972 தொகை முதலீட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும் பெறவேண்டிய ஏனைய வருமானக் கணக்கில் வரவு வைக்கப்பட்டமையினால் முதலீட்டுக் கணக்கு அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2008 மற்றும் முன்னைய வருடத்திற்கான பெறுமதிசேர் வரிக் கணக்கில் ஆரம்ப மீதியாக ரூபா 680,705 தொகை செலவு மீதியொன்றாக காட்டப்பட்டிருந்த போதிலும் வெளியீட்டு வரி குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டமை, சீராக்கியமை போன்ற காரணங்களினால் மீளாய்வாண்டின் போது ரூபா 685,112 தொகை செலுத்தப்பட்டிருந்தும் மீதியானது வரவு மீதியொன்றிற்கு உள்ளாகியிருந்தது. மேலும் 2011 ஆம் ஆண்டின் போது 2008 இற்கு முன்னைய வருடங்களுக்காக ரூபா 70,878 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அது மீளாய்வாண்டின் கடன்கொடுத்தோராக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது உள்ளீட்டு வரியில் ஈடுசெய்ய முடியுமாக இருந்த உள்ளீட்டு வரித்தொகை ரூபா 1,321,139 ஆக இருந்த போதிலும் நாட்குறிப்புப் பதிவு 39 இன் மூலம் ரூபா 1,319,378 தொகை கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டில் பெறுமதி சேர்வரி அறிக்கை தயாரிக்கின்ற போது வெளியீட்டு வரி ரூபா 1,851,921 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்குகளின் பிரகாரம் ரூபா 1,855,579 ஆனமையால் ரூபா 3,658 தொகை குறைத்து உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் ரூபா 8,752,049 ஆக இருந்ததுடன், துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகள் ரூபா 8,863,542 ஆக இருந்தது.

**1.3.3 கணக்காய்விற்காக சான்றுகள் இன்மை**

(அ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2011 யூன் 30 ஆந் திகதி வரையில் 16 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் அளிக்கப்படாதிருந்ததுடன் அவ் ஐய வினாக்களுடன் தொடர்புடைய கணக்கிடக் கூடிய கொடுக்கல், வாங்கல்களின் பெறுமதி ரூபா 63,342,223 ஆகும்.

(ஆ) கணக்காய்விற்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

10 கணக்கு விடயங்களுக்குத் தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 265,019,817 இற்கான கொடுக்கல், வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதுள்ளது.

**1.3.4 இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண அறிவுறுத்தல்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 1988 ஏப்ரல் 20 ஆந் திகதிய 88/20 ஆம் இலக்க சுற்றுநிருபம் | அறவிட வேண்டியுள்ள நிலுவையாக இருந்த ஏனைய வருமானம் தொடர்பான காலப்பகுப்பாய்வொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | 2008 சனவரி 25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் விநியோகிக்கப்பட்டிருந்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அதிகாரங்களைக் கையளித்தல் மற்றும் அதிகாரங்களை அமுல்படுத்துதல் தொடர்பான அறிவுரைக் கோவையின் சுற்றாடல் | இடப் பரிசோதனை நடவடிக்கைகள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரக் கட்டணம் என்பவைகளுக்காக பெறப்படுகின்ற வருமானம் உள்ளூராட்சி நிறவனத்தில் தனியான அறவீட்டுத் தலைப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

அனுமதிப்பத்திர விநியோக நடைமுறைகளின் உபபட்டோலை 02 இன் 09 ஆம் இலக்க (i) ஆம் பிரிவு

### 1.3.5 தீர்க்கப்படாத கணக்குகள்

05 வருட காலத்தினுள் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் முன்கொண்டுவரப்படுகின்ற நிலையான வைப்பு வட்டி மற்றும் மதிப்பிழந்த காசோலைகள் முறையே ரூபா 12,900 மற்றும் ரூபா 2,500 தொகையும், 2007 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்படுகின்ற மதிப்பிழந்த காசோலை ரூபா 61,870 தொகையையும் தீர்ப்பதற்கோ அல்லது கணக்குகளுக்கு கொண்டு வருவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 32,188,247 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 48,341,830 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதீப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான விபரங்களைச் சமர்ப்பிக்குமாறு என்னால் 2011 மார்ச் 08 ஆந் திகதிய தலைவரிடம் கோரப்பட்டும் மற்றும் மீள நினைவுபடுத்தப்பட்டிருந்த போதிலும் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரை உரிய விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 சீதுவை புதிய வியாபாரக் கட்டிடத் தொகுதியின் கடைகளை வாடகைக்கு விடல்

(i) வியாபாரக் கட்டிடத் தொகுதியின் 59 கடைகளில் 30 கடைகள் மாத்திரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வாடகைக்கு விடப்பட்டிருந்தது.

வாடகையாளர்கள் முன்வராமையினால் 29 கடைகளை வாடகைக்கு விடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வியாபாரக் கட்டிடத் தொகுதியின் ஆரம்பத் திட்டத்திற்கு மேலதிகமாக நிர்மாணிக்கப்படடிருந்த 14 கடைகளை உள்ளடக்கிய இரண்டுமாடி வியாபாரக் கட்டிடத்தொகுதி பிரதான வீதிக்கு முன்பாக அமைக்கப்படாமையினால் இது வரையில் ஒரு கடைக்காவது கேள்வி கோரப்பட்டிருக்கவில்லை. இந்நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு முன் சாத்திய வள ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் இக்கடைகளை நிர்மாணிப்பதற்கு முன் கேள்வி கோரப்பட்டு விற்பதற்கேனும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) ரூபா 42.5 மில்லியன் தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த இவ்வியாபாரக் கட்டிடத்தொகுதியில் ச.தொ.ச நிறுவனத்திற்கு வாடகைக்கு விடப்பட்ட 05 கடைகளிலிருந்து பெற்பபடுகின்ற ரூபா 34,387 தொகை உள்ளடங்கலாக மாதாந்தம் கடை வாடகையாக ரூபா 79,737 மாத்திரம் பெறப்பட்டிருந்தது.

## 2.3 செலவின கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவு உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவு விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதீடு | உள்ளவாறானது | முரண் | பாதீடு | உள்ளவாறானது | முரண் |
| | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 |
| **மீண்டுவரும் செலவுகள்** | | | | | | |
| ஆளுக்குரிய வேதனம் | 43,985 | 40,886 | 3,099 | 37,988 | 37,620 | 368 |
| ஏனையவை | 55,954 | 47,455 | 8,499 | 44,591 | 53,092 | (8,501) |
| உப கூட்டுத் தொகை | 99,939 | 88,341 | 11,598 | 82,579 | 90,712 | (8,133) |
| மூலதன செலவுகள் | 85,460 | 102,957 | (17,497) | 141,666 | 109,334 | 32,332 |
| மொத்தக் கூட்டுத் தொகை | 185,399 | 191,298 | (5,899) | 224,245 | 200,046 | 24,199 |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கை

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் 2011 மார்ச் 08 ஆந் திகதி என்னால் கோரப்பட்டும் மற்றும் மீள நினைவுபடுத்தப்பட்டிருந்த போதிலும் அத்தகவல்கள் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.2 செயற்திட்டத்திற்காக ஊழியர்களைச் சேர்த்தல்

(i) வீதி மற்றும் சுகாதாரத் தொழிலாளர்களின் 08 வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஏனைய பல்வேறு செயற்திட்டங்களுக்காக 107 தொழிலாளர்கள் 2010 மே 31 ஆந் திகதி சபை அங்கீகாரத்துடன் ஆட்சேர்க்கப்பட்டிருந்த போதிலும் உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்கூறப்பட்டவாறு அங்கீகாரமின்றி ஆட்சேர்க்கப்பட்டிருந்த தொழிலாளர்களுக்கு 2010 யூன் மாதம் வரையில் ரூபா 1,369,750 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஒவ்வொரு செயற்திட்டத்திற்குமான நிகழ்ச்சித்திட்டம், நோக்கம், எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கிய கடிதக் கோவை, செயற்திட்ட அறிக்கை, பிற்பரிசோதனை அறிக்கை, முன்னேற்ற மீளாய்வு அறிக்கை மற்றும் ஊழியர் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் போன்றன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) களஞ்சியக் கட்டுப்பாடு

(i) மின்சாரப் பிரிவின் இருப்புப் பதிவேட்டின் பிரகாரம் 12 சந்தர்ப்பங்களில் இருப்பு மீதியின்றி இருப்புக்கள் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் இருப்புப் பதிவேட்டில் காணப்படுகின்ற 03 விடயங்களின் இருப்புக்கள் 2011 பெப்ரவரி 02 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது இருப்புக் குறைவு அவதானிக்கப்பட்டது.

(ii) இருப்புப் பேரேடு மற்றும் இருப்புப் பதிவேடு (பின்காட்) என்பன இரண்டு உத்தியோகத்தர்களால் பேணப்படுவதற்குப் பதிலாக சகல நடவடிக்கைகளும்

களஞ்சியப் பொறுப்பாளரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் இருப்புக் கட்டுப்பாடு தொடர்பாக போதியளவு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று அமுல்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) பேணப்பட்டிருந்த இருப்புப் பதிவேட்டில் 2010 ஆகஸ்ட் 30 ஆந் திகதிக்குப் பின்னர் விநியோகத்தல்கள் குறிப்பிடப்பட்டிராததுடன் பொருள் பெறுவனவுக் குறிப்பு இலக்கம் குறிப்பிடப்படாமை, பொருள் பெறுவனவு மற்றும் விநியோகத்தல்கள் பின்னர் சமர்ப்படுத்தப்படாமை மற்றும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் பரீட்சத்து கையொழுத்தினால் உறுப்படுத்தப்படுத்தல்கள் என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) இருப்புக்களிற்கான கட்டளையிடும் செயற்பாடுகளின் போது இருப்புப் பேரேடு கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக ஈடுபடுத்தப்படாமையினால் 2011 பெப்ரவரி 02 ஆந் திகதியில் 140 மின்குமிழ்களின் மேலதிக இருப்பு மீதியொன்று அவதானிக்கப்பட்டது.

**(ஆ) நீர்க் குழாய் பதித்தல் வேலை**

---------------------------------------------------

(i) திட்டமிடல் குழுவிற்காக நகர சபை உறுப்பினர்கள் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்ததுடன் கேள்விகளைத் திறத்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளல் என்பன நகர சபையின் பிரதிநிதியின் முன்னால் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) செயற்திட்டத்திற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து கிடைத்த பொருட்கள் தொடர்பாக எழுத்து மூல உறுதிப்படுத்தலொன்றை சமர்ப்பிப்பதற்கு சபை இயலாதிருந்ததுடன் தயாரிக்கப்பட்டிருந்த தேவையான மதிப்பீட்டினுள் அப்பெறுமானமும் உள்ளடக்கப்பட்டிருந்ததா என்பதை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**(இ) 49-7632 ஆம் இலக்க உழவு இயந்திர பழுதுபார்த்தல்**

------------------------------------------------------------------------------------------

மேற்கூறப்பட்ட இலக்கத்தையுடைய உழவு இயந்திர பழுது பார்த்தலுக்காக வேலை அத்தியாட்சகரின் சிபார்சு இன்றி கராஜ் ஒன்றில் கையளிக்கப்பட்டு பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படாமல் 03 வருடங்களுக்கும் மேலான காலத்தின் பின்னர் திரும்பவும் சபைக்கு 2011 ஏப்ரல் 19 ஆந் திகதி கொண்டு வந்திருந்த போதிலும் 2011 நவம்பர் 24 ஆந் திகதி வரையிலும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தினுள் போதுமான அளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும், கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) உள்ளகக் கணக்காய்வு

(ஈ) வாகனக் கட்டுப்பாடு

(உ) மனிதவள முகாமைத்துவம்